



- வாழ்வோம்

முல்லை சத்தி; கல்லக்குடி தண்டவாளத்தில் கலைஞருடன்...



181

இடம்பிடித்தவை

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த முல்லை சத்தி அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

1953-ஆம் ஆண்டு, கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம், முத்தமிழறிஞர் கலைஞரின் வீரத்திற்கும் தீரத்திற்கும் சான்றாகத் திகழும் வரலாறு. 'தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கும் களத்தில் கழகம் எந்த இழப்புக்கும் அஞ்சாது' என உலகத்துக்கு அறிவித்த அந்த உரிமைப் போராட்டத்தில், தன் உயிருக்கும் அஞ்சாது தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்தார் கலைஞர். அவர் தலைமையிலான அணியில் ஐவர்; அவருக்கு அடுத்து தலைவைத்து, தமிழ் மானம் காக்கத் துணிந்தனர். அந்த ஐவரில் கலைஞருக்கு அடுத்து தலைசாய்த் திருந்தவர், முல்லை சத்தி. 'என்னைக் கொழு கொம்பாக்கிக்கொண்டு என்மீது படர்ந்து, நட்பு மணம் பரப்பிய இனிய தோழர்!" என்று நெஞ்சம் நெகிழ கலைஞர் குறிப்பிட்ட உடன்பிறப்பு. அன்றைய வடஆற்காடு கழகத்தின் மூத்த முன்னோடி. முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவில் நீங்காத இடத்தைப் பெற்ற நெருக்கமான இலக்கியத் தோழர். இயற்பெயர் சத்தியமூர்த்தி.

அன்றைய வடஆற்காடு மாவட்டம், இன்றைய திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடிக்கு அருகிலுள்ள முல்லைக்கொம்பை என்ற சிற்றூரைப் பூர்வீகமாகக் கொண்டவர். *1926*-ஆம் ஆண்டு பிறந்தவர். வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் படித்தவர். இளம் வயதிலேயே திராவிடக் கொள்கைகளில் ஈடுபாட்டுடன் இயங்கத் தொடங்கி, கழகத்தின் தொடக்க காலத்திலேயே இணைத்துக்கொண்டவர். எழுத்தாளர், திராவிட இயக்கப் பேச்சாளர் எனப் பல தளங்களில் இயங்கியவர். சென்னையில், 'முல்லை அச்சகம்' நடத்திவந்தார். அந்த அச்சகம், கழக முன்னோடிகள் பலருக்கும் மாலை வேளைகளில் அரசியல் பேசும் மையமாகத் திகழ்ந்தது. **'திராவிட நாடு', 'நம் நாடு'** இதழ்களில் எழுதத் தொடங்கியவர், *1954-60*-களில் **'முரசொலி'** எழுத்தாளர் வரிசையில் இடம்பெற்றார்.

முத்தமிழறிஞர் கலைஞரோடு இவர் கொண்டிருந்த நெருக்கத்தின் காரணமாக, மும்முனைப் போராட்டத்தில் கலைஞர் தலைமைதாங்கிய அணிக்கு இவரையும் அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. 'கல்லக்குடியிலே களம். அதற்கு நான், படைத்தலைவன். அந்த இன்பச் சேதி கேட்டு என்னுடன் தொடர்ந்த முல்லை சத்தி, இருவர் இருதயமும் அந்நிலையை அடைய, இதைவிட வேறு காரணம் என்ன தேவை?' என அந்த அறிவிப்பின் மகிழ்ச்சியினைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

மும்முனைப் போராட்டத்தில் கலைஞருடன் கைதுசெய்யப்பட்டு, ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்றவர். திருச்சி மத்திய சிறையில், கலைஞருடன் அடுத்தடுத்த அறைகளில் அடைக்கப்பட்டிருந்தவர். 'இரவில் உறக்கம் வரும் வரை அவரவர் அறைகளில் இருந்தபடி உரக்கப் பேசிக் கொண்டிருப்போம்'என 'அண்ணாவும் தம்பியரும்' நூலில் அந்த நாட்களைக் குறிப்பிடுகிறார் முல்லை சத்தி.

1953-ஆம் ஆண்டு, பரமக்குடியில் ஒரு கூட்டத்தை முடித்துவிட்டு, வாடகைக் காரில் திருச்சி திரும்பிக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில், கலைஞரின் இடது கண்ணில் காயம் ஏற்பட்டது. வலியோடு திருச்சி நிகழ்ச்சிகள், கன்னியாகுமரி மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சென்னை திரும்பிய கலைஞரை, பிடிவாதமாக வேலூர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றவர் முல்லை சத்திதான்.

1955-ஆம் ஆண்டுவாக்கில், வடஆற்காடு மாவட்டச் செயலாளராகச் செயல்பட்டார். *1957*-ஆம் ஆண்டில், திருவண்ணாமலையில் வடஆற்காடு மாவட்ட மூன்றாவது மாநாடு, சுவாமி அருணகிரி அடிகளார் தலைமையில், இந்தி எதிர்ப்பு மாநாடாக நடைபெற்றபோது, வரவேற்புக் குழுவில் இருந்து வழிநடத்தியவர்.

1956-ஆம் ஆண்டுவாக்கில், இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் பொதுத்தேர்தல் குறித்த முக்கியமான கலந்தாய்வுக் கூட்டங்களை, மாவட்டச் செயலாளர் என்ற முறையில் தோழர் முல்லை சத்தி நடத்தியதை **'முரசொலி'** இதழ்கள் பதிவுசெய்துள்ளன.

1965 -ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, பிப்ரவரி மாதம் கலைஞர் கைதுசெய்யபட்டு, எங்கு கொண்டுசெல்லப்படுகிறார் எனத் தெரியாத நேரத்தில், 'முரசொலி' அலுவலகத்தில் இருந்த முல்லை சத்தி, 'முரசொலி' மாறன் ஆகியோர்தான் பேரறிஞர் அண்ணாவுக்குத் தகவல் அளித்ததுடன், கழக முன்னணி யினரைத் தொடர்புகொண்டு, அடுத்தகட்டப் போராட்டங்களை ஒருங்கிணைத்தனர். இப்படி, கழகத்தோடும் கலைஞருடனும் பல நினைவுகளைக் கொண்டுள்ளவர் முல்லை சத்தி.

கட்சி அல்லது கொள்கை விவகாரங்களில் முல்லை சத்தி, யாருக்கும் அஞ்சாமல் நேர்படப் பேசும் குணம் கொண்டவர். அண்ணாவே இவரைப் பற்றிக் குறிப்பிடும் போது, "'முல்லை சத்தி கோபக்கார ராயிற்றே!"என்று அன்போடு கூறியதை 'அண்ணா சில நினைவுகள்' நூலில் குறிப்பிடுகிறார், கவிஞர் கருணானந்தம். "'கொடுத்த பொறுப்பை செவ்வனே செய்பவர். கொஞ்சம் முன்கோபக்காரரே தவிர, தோழமைக்கோர் பிசிராந்தை" என்று குறிப்பிடுவார் கலைஞர்.

அவரது சிறுகதைகள் மற்றும் நாவல்கள், சமூக மாற்றம், விதவை மறுமணம் ஆகியவற்றை ஆதரித்தவை. சாதியக் கொடுமைகளுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டிருந்தவை. **'வெள்ளி இரவு', 'மதன மண்டபம்', 'இன்பத்தின் மடியில்'** எனப் பல நூல்களை வெளியிட்டுள்ளார். **'அண்ணாவும் தம்பியரும்'** நூல், கழகப் பணி அனுபவங்களைப் பேசியது. சில திரைப்படங்களுக்கு வசனமும் எழுதியுள்ளார்.

முல்லை சத்தி போலவே, அவரது சகோதரர் முல்லை வடிவேலுவும் கழகத்தின் வடஆற்காடு மாவட்டத் தளகர்த்தராக விளங்கியவர். முல்லை சத்தி - முல்லை வடிவேலு இல்லத்துக்குச் சென்ற அனுபவத்தை **'நெஞ்சுக்கு நீதி'**யில் எழுதியுள்ளார் கலைஞர். "முல்லை சத்தி வீட்டுக்குச் செல்லும் வழி காட்டுப்பாதை என்பதால், நான் அவர்கள் வீட்டுக்குத் தனியாகச் சென்றதும் பதறினார்கள். 'வழியில் எதிர்க்கட்சி விஷமிகள் ஆயுதங்களுடன் வந்தால் என்னாவது?' எனக் கேட்டுள்ளனர். 'அவர்கள்தான் ஆயுதங்கள் கொண்டு வருவார்களே' என கலைஞர் நகைச்சுவையாகப் பதில் அளித்தார். அதையே சட்டமன்றத்திலும் கலைஞர் பதிவுசெய்தது, 'தக்லைப்' என சமூக வலைதளங்களில் பரவியது.

நெடிய போராட்ட வரலாறு கொண்ட முல்லை சத்தி அவர்கள், *1977*-ஆம் ஆண்டு, எதிர்பாராதவிதமாக இயற்கை எய்தினார். கழகத்தினர் திரளாக அவருக்கு மரியாதை செய்தபோது, கலைஞர் தனது நினைவுகளைக் கடிதமாக்கினார்.

'கல்லக்குடி தண்டவாளத்தில் நாங்கள் தலை வைத்துப் படுத்திருந்தபோது, வேகமாக விசில் ஊதிக்கொண்டு ரயில் புறப்பட்டதும், நாங்கள் சற்றும் அசைவின்றி அதனை எதிர்நோக்கியதும் - பின்னர் சிறையில் ஒன்றாக இருந்ததும் - தி.மு.கழகத்தின் தியாக வரலாற்றில் ஒரே ஏடல்லவா? அந்த ஏட்டில் வைரமணிகளாக ஜொலிக்கும் வரிகள் அல்லவா முல்லை சத்தி, கஸ்தூரி ராஜ், குமாரவேலன், குழந்தைவேலன் என்ற பெயர்கள்' எனக் குறிப்பிட்டிருப்பார். 'கல்லக்குடி' பெயர் நிலைக்கும் வரை முல்லை சத்தியும் நிலைத்திருப்பார்.

...துடிக்கும்

நீரை.மகேந்திரன்



பன்முகத் தளத்தில் பெரியாரியம் - ஆய்வுக் கட்டுரைகள் எழுதலாம்!

சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி இருக்கை, பேரறிஞர் அண்ணா இருக்கை, முத்தமிழறிஞர் தமிழ்வேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் சார்பில், பன்முகத் தளத்தில் பெரியாரியம்' என்னும் பொருண்மையில் டிசம்பர் இரண்டாம் வாரத்தில் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தரங்கிற்காக ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்பட்டுள்ளன.

`பெரியாரின் தனித்துவப் பண்புகள், மனித மாண்புகளைப் போற்றிய பெரியார், பெரியாரின் தன்னல மறுப்பு, சுயசிந்தனை மரபில் பெரியார், பெரியாரின் சொற்பொழிவு உத்திகள், பெரியாரின் எழுத்து நயம், பெரியாரின் கல்வியியல் சிந்தனைகள், பெரியாரின் சுயமரியாதைக் கருத்தியல் உள்ளிட்ட 25 தலைப்புகளில் கட்டுரைகள் வரவேற்கப்பட்டுள்ளன. ஆய்வறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் முதுநிலை மாணவர்கள் கட்டுரைகளை வழங்கலாம். ஆய்வுக் கட்டுரைகள், முறையான ஆராய்ச்சி நெறிமுறைகளைப் பின்பற்றியும் கருதுகோளை மையமிட்டதாகவும், புது விதமான ஆய்வுப் பார்வையை வெளிப்படுத்து வதாகவும் பிழைகளின்றியும் அமைதல் வேண்டும்' எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆய்வுச் சுருக்கத்தை 10.11.2026-க்குள் அனுப்ப வேண்டும். கட்டுரைகளை வழங்க இறுதி நாள், 20.11.2026. ஆய்வுச் சுருக்கம் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : KALAIGNARRESEARCH@PERIYARUNIVERSITY.AC.IN. தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள், பின்னர் நூலாகத் தொகுத்து வெளியிடப்பட உள்ளது. விருப்பமுள்ளோர் கட்டுரைகளை அனுப்பலாம்.

ஃப்ளாஷ்பேக்



தலைவர் தலைமையில் மணவிழா!



சு.செழியன்

1986-ஆம் ஆண்டில், எனது மணவிழா நம் தானைத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், இன்றைய பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன், அண்ணன் ஆற்காட்டார், அண்ணன் முகமது சகி மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொள்ள நடைபெற்றது. அதுகுறித்த செய்தி, அடுத்த நாள் 'முரசொலி'யில் வெளியானது. என் தந்தையார், கழக முன்னோடி பி.சி.சுப்பிரமணியம் நகரக் கழகத் தலைவராக இருந்து, பின்னர் அவைத் தலைவராக இருந்தவர்.

- சு.செழியன், மாவட்ட இலக்கிய அணித் துணைத் தலைவர், முன்னாள் நகரச் செயலாளர், தலைமைக் கழகப் பேச்சாளர், ராணிப்பேட்டை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1956

கருப்பு - சிவப்புக் கொடியின் அளவு!

-ஆம் ஆண்டு மே மாதம், 17 முதல் 20 வரை நான்கு நாட்கள், கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது. அதில் பங்கேற்க வரும் கழகத்தினருக்கு, `கழகக் கொடி'க்கான அறிவிப்பினை வெளியிட்டது, தலைமைக் கழகம். ``2-வது தி.மு.க. மாநில மாநாட்டுக்கு வரும் கிளைக் கழகத் தோழர்கள், தங்கள் கிளைக் கழகத்தின் பெயர் பொறித்த கொடிகள் கொண்டுவர வேண்டும்; கொடியின் அளவு 3 அடி நீளம் 2 அடி அகலம் இருக்க வேண்டும்; கொடியின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது" என்று அறிவித்தது.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900